NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 29 July 2017

# தேசிய பல்கலைக்கழகத் தலைவராக பேராசிரியர் டான் எங் சாய் நியமனம்



பல்கலைக்கழக நகர மாணவர் குடியிருப்புத் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்திய சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் (என்யுஎஸ்) தற்போதைய துணைத் தலைவர் பேராசிரியர் டான் எங் சாய் (படம்), அப்பல்கலைக்கழகத்தின் 23வது தலைவராக நேற்று நியமிக்கப் பட்டார்.

என்யுஎஸின் முன்னாள் மாணவரும் கணித நிபுணருமான பேராசிரியர் டான் கடந்த பத்து ஆண்டுகளாக என்யுஎஸின் துணைத் தலைவராக இருந்து வருகிறார். அவர் அடுத்த ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி முதல் தற்போதைய தலைவரான பேராசிரியர் டான் சோர் சுவானுக்குப் பதிலாகப் பதவி ஏற்றுக் கொள்வார்.

55 வயதாகும் பேராசிரியர் டான் முனைவர் பட்டத்தையும் யேல் பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில் முதுநிலை பட்டமும் பெற்றுள்ளார். பல்கலைக்கழகத்தின் ஏட்டுக்கல்வித் திட்டத்தின் முன்னோடியாகத் திகழ்கிறார்.

2008ஆம் ஆண்டு முதல் என்யுஎஸின் தலைவராக உள்ள பேராசிரியர் டான் சோர் சுவான் இவ்வாண்டு இறுதியில் சுகாதார அமைச்சில் பணியாற்றுவார். அடுத்த ஆண்டுக்கான அதன் புதிய மூத்த துணைத் தலைவராக 56 வயதாகும் பேராசிரியர் ஹோ டெக் ஹுவாவின் பெயரை என்யுஎஸ் நேற்று அறிவித்தது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.